பாட்டின் ஆழ, அகல, உயரங்களுக்கு இசைந்த ஓர் ஜீவ சக்தியாகும்.

### தலைவலி

பந்தளத்தில் ஐயப்பன் வளர்ந்து வரும்போது, அரசிக்கு ஒரு குழந்தை பிறந்தது. மூத்தவன் எனும் முறையில் அரசன் ஐயப்பனுக்குப் பட்டம் கட்டிவிடக் கூடாது எனக் கருதினாள் அரசி. அமைச்சன் சூழ்ச்சியால் அரசி தீராத தலைவலி இருப்பது போல் நடித்தாள். தலைவலி தீர்க்கப் புலிப்பால் வேண்டும் என்றான் அரண்மனை வைத்தியன். அதனைக் கொணர ஐயப்பன் கானகம் செல்ல வேண்டியதாயிற்று.

தலைவலி ஒரு குறியீடு. ''பொய்மையே பேசி பொழுதினைச் சுருக்கும் புழுத்தலை''களில் உருவாகும் வஞ்சக வலிகள் புலிப்பால் கேட்டுத் தர்மசாஸ்தாக்களை அப்புறப்படுத்தும்; போலித் தலைவலிகளின் புலிப்பாலுக்காக வாழ்வின் ஐஸ்வர்யத்தைக் கானகத்துக்கு விரட்டும். தர்மமோ மகிஷிகளைக் கொன்று தேவர் முதுகுகளில் பவனிவரும். 'நன்மை'யை அலைக்கழிப்பதில் புதிய நலப்பிரவாகமே அமையும். கைகேயியின் சூழ்ச்சியில் இராமனின் வனவாசம் ஓர் ஆன்மீக எழுச்சியின் விதை சுமந்தது. பந்தள ராணியின் சூழ்ச்சியில் ஐயப்பனின் வனயாத்திரை ஓர் ஆன்மீக எழுச்சியின் ஊற்றுக் கண்ணைத் திறந்தது.

### தாவளங்கள்

சபரிமலை யாத்திரை செல்லும் பக்தர்கள் வழி நெடுகிலும் ஆங்காங்கே பல தாவளங்களில் இளைப்பாறிச் செல்வர். இத் தாவளங்கள் வரலாற்று இழையும், புராண உறவும், இயற்கை வனப்பும், இளைப்பாற்றும் சக்தியும், ஆன்மீக இனிமையும் உடையவை. எருமேலி, பேரூர்த்தோடு, காளகட்டி, அழுதா மேடு, முக்குழி, எலவந்தாவளம், கரிமலைமேடு, வலியான வட்டம், சிறியான வட்டம், பம்பா நதி, நீலிமலை, சபரி பீடம், சரங்குத்தி ஆல் போன்றவை குறிப்பிடத்தக்க சில தாவளங்கள்.

### திருவாபரணம்

மகர சங்கிரம தினத்தில் மாலை நேரத் தீபாராதனையின் முன்பு ஐயப்பன் திருவுருவில் அணிவித்துப் பூஜை செய்யும் பொருட்டுப் பந்தளத்திலிருந்து வந்து சேரும் நகைகளுக்குத் திருவாபரணம் என்பது பெயர். பந்தளம் அரண்மனையிலிருந்து விரதமிருக்கும் பக்தர்களால் தலைச்சுமட்டில் பெட்டியில் வைத்துச் சுமந்து கொண்டு வரப்படும். இப்பெட்டி திரு ஆபரணப் பெட்டி எனப்படும்.

திருஆபரணப் பெட்டியைத் தரிசனம் செய்வதும் புண்ணியமாகும். சரங்குத்தி ஆலிலிருந்து பதினெட்டாம் படி வரையிலும் இப்பெட்டியைக் கண்டு தொழப் பக்தர்கள் காத்திருக்கும் காட்சி பேரானந்தமாகும். எங்கும் சரண கோஷம் முழங்கும்; வாத்திய இசை ஒலிக்கும்; கருடன் வானில் பறக்கும். பெட்டியைச் சுமந்து வருவோர் துள்ளித் துள்ளி ஆடி வருவர். ஐயப்பன்மார் பெட்டியைத் தொட்டு வணங்கத் துடிப்பர். ஒரு பெட்டி ஐயப்பனுக்கும், மற்றொன்று மாளிகைப் புறத்துக்கும் செல்லும். ஆபரணங்கள் அணிவித்தபின் மங்களகரமான தீபாராதனை நிகழும். கீழ் வானில் ஒரு நட்சத்திரம் தோன்றும். காந்தமலையில் மகர ஜோதி தெரியும்.

### திருவுருவம்

யோக நெறியே இறுகி உறைந்து உருவான திருக்



கோலத்தை ஐயப்பன் திருவுருவில் தரிசனம் செய்யலாம். வலது கையில் சின்முத்திரை காட்டி, முழங்காலின் மேல் நீளத் தொங்கிய இடக் கரத்தினால் ஆனந்த நிலை காட்டி, பிரணவ வடிவத்தில் ஞானபீடத்தில் வீற்றிருக்கும் அற்புதக் கோலமே ஸ்வாமியின் திருவுருவம்.

### தேங்காய்

ஐயப்ப வழிபாட்டில் தேங்காய் முக்கிய இடம் பெறுகிறது. வழிக் கோயில்களில் உடைக்கும் சிதறுதேங்காய், பதினெட்டாம் படியில் உடைத்தற்குரிய படித்தேங்காய், நெய்யபிஷேகத்தின் பொருட்டு எடுத்துச் செல்லும் நெய்த் தேங்காய் எனும் மூவகைத் தேங்காய்கள் உள்ளன.

இருமுடிக்கட்டினைக் குருசாமி தூக்கிப் பக்தர் தலையில் வைத்த உடனேயே சபரியாத்திரை மேற்கொண்ட அப் பக்தர் சிதறு தேங்காய் உடைப்பார். பின்பு யாத்திரையில் கோயில் தோறும் தேங்காய் உடைப்பர். பொதுவாகத் தேங்காய் உடைத்தலை அகந்தை நீக்கத்தின் அறிகுறியாகக் கருதுவர். மாளிகைப் புறத்தம்மன் கோயிலில் தேங்காய் உடைப்பதில்லை; தேங்காய் உருட்டி விடுவது அங்குள்ள வழிபாட்டு முறையாகும்.

பதினெட்டாம் படியில் உடைத்ததற்குரிய தேங்காயினைத் தாம் செல்லும் சபரி யாத்திரையின் எண்ணிக்கைக்கு ஏற்ப உடைப்பர். கன்னியாத்திரைக்காரர் முதற்படியிலும், இரண்டாம் யாத்திரைக்காரர் இரண்டாம் படியிலும், என்று இவ்வாறு உடைக்க வேண்டும். நெய்த் தேங்காய் ஐயப்பனுக்கே உரிய விசேஷ வழிபாடு. கட்டுக் கட்டும் போது குருசாமியால் தேங்காயில் நெய் நிரப்பும் சடங்கு நிகழ்த்தப் பெறும். இந்த நெய்தான் நெய்யபிஷேகத்துக்குப் பயன்படுத்தப்படும். நெய்யபிஷேகம் முடிந்த தேங்காய்களை கணபதி சந்நிதியில் ஹோமகுண்டத்தில் எறிய வேண்டும்.

**ஒப்பிலா மணியே... சரணம் ஐயப்பா ❁ ஓம்கார பிரம்மமே... சரணம் ஐயப்பா**